கங்கள் எழுந்துள்ளன.

### உடல் உறுப்புகள் சோதனை

அவரது உடல் உள்ளுறுப்புகள் கொச்சியில் உள்ள மண்டல ரசாயன பரிசோதனை ஆய்வுக்கூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் அவரது உடலில் 'குளோர்பைரிபோஸ்' என்ற பூச்சிக்கொல்லி மருந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவர் விஷம் கொடுத்து கொல்லப்பட்டாரா என்ற கேள்வி எழுந்தது.

அவரது ரத்த மாதிரியை பரிசோதித்த ஐதராபாத் மத்திய தடய அறிவியல் ஆய்வுக்கூடம், அதில் விஷ சாராயம்

பர்கள், உதவியாளர்கள் சாராயத்தில் விஷம் கலந்து தந்திருக்கலாம் என குடும்பத்தினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த வழக்கில் கேரள போலீசார் 3 மாதத்துக்கும் மேலாக விசாரணை நடத்தியும் துப்பு துலங்க வில்லை.

### சி.பி.ஐ. விசாரணை

இதையடுத்து இந்த வழக்கின் விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்க கேரள போலீஸ் டி.ஜி.பி., மாநில அரசுக்கு பரிந்துரை செய்தார். அதைப் பரிசீலித்த முதல்–மந்திரி பினராயி விஜயன் தலைமையிலான கேரள இடதுசாரி அரசு, கலாபவன் மணி மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை

---

படகு கவிழ்ந்து, உயிர் இழந்த

# மீனவர் குடும்பத்திற்கு ரூ.1 லட்சம் நிதி உதவி

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஜூன்.12–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், திருச்சினாங்குப்பத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் 9.6.2016 அன்று பைபர் படகில், சென்னை கடல் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த போது, கடல் பேரலையால் படகு கவிழ்ந்ததில் திருவொற்றியூரை சேர்ந்த கஜேந்திரன் என்பவரின் மகன் சங்கர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மீனவர் சங்கரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் சங்கர் குடும்பத்திற்கு முதல்–அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

இதைத்தொடர்ந்து மீனவர் குடும்பத்துக்கான காசோலையை மீனவர் சங்கரின் மனைவி மைதியிடம் பள்ளி கல்வித்துறை அமைச்சர் பெஞ்சமின் வழங்கினார். அப்போது திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் சுந்தரவல்லி, முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன், ஆர்.டி.ஓ. வீரப்பன், தாசில்தார் சிராஜ்பாபு, மண்டலக்குழு தலைவர் தனரமேஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

MSME

Government of India

MSME DEVELOPMENT INSTITUTE, GUINDY, CHENNAI - 32

5 days week-end Training on

**SHIPPING & LOGISTICS**

Training Dates : 18th, 19th, 24th, 25th & 26th June 2016 (10 am to 4.30 pm)

Venue : Sea Waves Hall, Alandur, Chennai -16

Coverage : Logistic operations in International Trade • Freight forwarding in Sea Cargo • Shipment Planning and Execution • Sea Cargo operations, Procedures & Documents • Customs clearance • Container booking and Handling • INCOTERMS

COURSE FEE : Rs.7,500/- (50% Concession for SC/ST/PH), to be paid by DD drawn in favour of "Director, MSME-DI, PD A/c, Chennai"

FOR REGISTRATION : Send mail to msmelogtraining@gmail.com

For Details, Contact : Sri. B. PACKIA RAJAN, Asst. Director, Room No.14, 1st Floor, MSME - DI, Adj. to SBI, Guindy, Chennai - 32

Mob : 89397 31818 / 97873 94893

GOVT OF INDIA CERTIFICATE WILL BE ISSUED TO SUCCESSFUL CANDIDATES

## தமிழ்நாடு நர்சிங் கவுன்சில், சாந்தோம், சென்னை -4

Ph: 044-24934792 email: info@tamilnadunursingcouncil.com
website: www.tamilnadunursingcouncil.com

### அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல் 2016 - 2017

தமிழ்நாட்டில் நர்சிங் பள்ளி/கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தமிழ்நாடு அரசு, இந்தியன் நர்சிங் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் ஆகும். இத்தகைய கவுன்சில்களின் அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரிகளின் நிறுவனங்களில் பயில்வதே முறையான கல்விக்கு வழிவகுக்கும். அதனால் நர்சிங் படிப்பு பயில விரும்பும் மாணவ/மாணவியர்கள் தாங்கள் தேர்வு செய்யும் நர்சிங் பள்ளி அல்லது கல்லூரியானது அங்கீகாரம் பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள எங்களது இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது, இணையதள முகவரி - www.tamilnadunursingcouncil.com

### பொதுமக்கள் கவனத்திற்கு

இந்திய நர்சிங் கவுன்சிலின் சுற்றறிக்கையின்படி மினிஸ்டிரி ஆஃப் லேபர் மூலம் வழங்கப்படும் நர்சிங் சம்பந்தப்பட்ட பாரத் சேவாக் சமாஜின் சான்றிதழ் பயிற்சியானது இந்திய நர்சிங் கவுன்சிலினால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதையும் மேலும் அந்நிறுவனத்தின் மூலம் படித்த மாணவ மாணவியர்களுக்கு மாநில நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்ய இயலாது என்பதையும், மேலும் கீழ்க்கண்ட அங்கீகரிக்கப்படாத நர்சிங் படிப்புகளின் தகுதி அடிப்படையில் அரசுப்பணியில் சேர்வதும் இயலாமல் போக நேரிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்த மாணவ மாணவியர்கள் எந்த ஒரு மருத்துவமனைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட செவிலியராக பணிபுரிய இயலாது என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்..

கீழ்கண்ட பெயர்களில் இந்த போலி நர்சிங் டிப்ளோமா / சர்டிபிக்கேட் கொடுக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

★ டிப்ளோமா இன் நர்சிங் அஸிஸ்டென்ட் கோர்ஸ் (Diploma in Nursing Assistance Course) (6 months / 2 years)
★ டிப்ளோமா இன் நர்சிங் (Diploma in Nursing) ( 2 years)
★ டிப்ளோமா இன்ஃபர்ஸ்ட் எய்டு நர்சிங் (Diploma in First Aid Nursing) (2 Yrs)
★ வில்லேஜ் ஹெல்த் நர்சிங் (Village Health Nursing) (2 years)
★ டிப்ளோமா இன் நர்சிங் எய்டு (Diploma in Nursing Aid) (2 years)
★ டிப்ளோமா இன்ஃபர்ஸ்ட் எய்டு & ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in First Aid & Practical Nursing)
★ டிப்ளோமா இன் ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in Practical Nursing) (1 yr / 2 yrs)
★ சர்டிஃபிகேட் இன் நர்சிங் (Certificate in Nursing) (1 year)
★ அட்வான்ஸ்டு டிப்ளோமா இன் நர்சிங் அஸிஸ்டென்ட் (Advanced Diploma in Nursing Assistant) (2 years)
★ டிப்ளோமா இன் ஹெல்த் அஸிஸ்டென்ஸ் (Diploma in Health Assistance) (1 yr)
★ நர்ஸ் டெக்னிஸியன் கோர்ஸ் (Nurse Technician Course)
★ ஹெல்த் கைடு கோர்ஸ் (Health Guide Course)
★ சர்டிஃபிகேட் இன் ஹெல்த் அஸிஸ்டென்ட் (Certificate in Health Assistant)
★ சர்டிஃபிகேட் இன் ஹாஸ்பிட்டல் அஸிஸ்டென்ட் (Certificate in Hospital Assistant)
★ சர்டிஃபிகேட் இன் பெட்ஸைடு அஸிஸ்டென்ட் (Certificate in Bedside Assistant)
★ சர்டிஃபிகேட் இன் பேஷண்ட் கேர் (Certificate in Patient Care)
★ சர்டிஃபிகேட் இன் ஹோம் ஹெல்த் கேர் (Certificate in Home Health Care)

தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலின் சட்டப் பிரிவு 12 (a) (1) மற்றும் (2)ன் படி, இதுப்போன்ற போலி படிப்புகளை நர்சிங் என்ற பெயரில் நடத்தும் நிறுவனம், சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த பொது அறிக்கை மூலம் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அறிக்கை வெளிவந்து 10 நாட்களுக்குள் இப்படிப்பட்ட நிறுவனங்கள் தானாக முன்வந்து மேற்கூறிய படிப்புகளை நிறுத்திவிடவேண்டும். இல்லையெனில், அத்தகைய நிறுவனங்களின் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிவாளர்
தமிழ்நாடு செவிலியர் குழுமம், சென்னை 600 004.

செமதொஇ/528/வரைகலை/2016

தினத்தந்தி 12/6/2016